விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 238 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 29 வியாழக்கிழமை (14.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## மன்னார் காற்றாலை மின்சாரத் திட்டம் ஒரு மாதத்துக்கு தற்காலிகமாக நிறுத்தம்

### ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இணக்கம்



(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின்சாரத் திட்டத்தின் செயற்பாடுகளை ஒரு மாதத்துக்குத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## முத்தையன்கட்டுச் சம்பவம் நீதியான விசாரணை

### பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

(மட்டக்களப்பு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை இடம்பெற்று வருகின்றது.

தவறு செய்தால் யார் என்றாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்துவது எமது பொறுப்பாகும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனித புதைகுழி வழக்கு

### நீதிமன்றில் இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)


செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பிலான வழக்கு இன்று வியாழக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு

15ஆம் பக்கம் பார்க்க

### - நீதி வழங்கும் -

# 'வரலாற்று வாய்ப்பை' பயன்படுத்துங்கள்

### அநுர அரசிடம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்



(கொழும்பு)

உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற குற்றங்கள் உட்பட கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு தாமதமின்றி நீதியை வழங்கவும் "வரலாற்று வாய்ப்பை" பயன்படுத்திக் கொள்ளுமாறு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடற்தொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பாக

### மயிலிட்டித் துறைமுகத்தில் ஆராய்வு



02ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழி தொடர்பாக வழக்கு முறையாக நடத்தப்படுகின்றது

### குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் – அமைச்சர் சந்திரசேகர்



(கிளிநொச்சி)

செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டு வருகிறது. தேவையான வளங்களை அரசாங்கம் வழங்கி வருகிறது.

குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்று கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணியில்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் சிலர் உயிருடன் புதைக்கப்பட்டிருக்கலாம்

### உறவுகள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் சிலர் உயிருடன் புதைக்கப்பட்டிருக்கலாம் என உறவுகள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜேர்மன்

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வங்கி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்



02ஆம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

## ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு நாளை வெள்ளிக்கிழமை தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

தமிழ்மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்

15ஆம் பக்கம் பார்க்க

## 'இதயபூர்வமான யாழ்ப்பாணம்'

### 20ஆம் திகதிவரை செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

இதயபூர்வமான யாழ்ப்பாணத்திற்கு - ஒற்றுமையின் தூய்மையான நெடும் பயணம்" எனும் கருப்பொருளிலான செயற்திட்டம் எதிர்வரும்

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையில் விபத்து

## மூன்றரை வயதுச் சிறுமி உயிரிழப்பு



மாத்தளை மாவட்டம் சீகிரியம திகம்பதஹா வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஒன்று மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்றரை வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் தம்புள்ளை, சியம்பலாகஸ் வெவ பகுதியைச் சேர்ந்த சசித்மி நெஹன்சா அலுவிஹாரே என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபர், அவரது மகளை முன் இருக்கையில் வைத்துக்கொண்டு பயணித்துள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒரு காரின் பின்புறத்தில் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் கார் மீது மோதியதில் மோட்டார் சைக்கிளின் முன் இருக்கையில் இருந்த மகள் வீதியில் தூக்கி வீசப்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

# ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சியில் எதிரணி ஈடுபடவில்லை

## முஜிபுர் ரஹ்மான் எடுத்துரைப்பு

ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித சூழ்ச்சியும் செய்யவில்லை." என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அந்தப் பொறுப்பில் இருந்து விலகிவிட முடியாது. நாம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எந்தச் சூழ்ச்சியும் செய்யவில்லை. எனவே சிறுபிள்ளைத்தனமான அறிவிப்புகளை விடுப்பதை ஜனாதிபதி நிறுத்த வேண்டும்.

செய்ய முடியும் என உறுதியளித்தே ஆட்சிக்கு வந்தார்கள். எனவே உறுதிமொழிகளை நிறைவேற்றிக்காட்ட வேண்டும். வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற நாம் அரசாங்கத்திற்கு வாய்ப்பளித்துள்ளோம்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்திக் குள் எவ்வித குழப்பமும் இல்லை என்றார். (ம-7)

## இலங்கை...

இலங்கை வங்கி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஊழியர்களின் உழைப்பை உறிஞ்சும் அரச பொறிமுறையை நிறுத்து என்னும் தொனிப்பொருளில் ஊழியர்களின் நலனில் அக்கறை எடுக்காமை, போனஸ் குறைப்புக்கு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கோரியும் அதற்கான முயற்சிகளில் அரசின் அசமந்தப் போக்குக்கு எதிர்ப்பு தெரிவித்தும், நேற்று (13) மதியம் 12.30 மணியளவில் யாழ் மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளை வலையமைப்புக்களை மூடி, அனைத்துப் பரிவர்த்தனைகளிலிருந் தும் விலக இலங்கை வங்கி ஊழியர் சங்கம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

அத்துடன் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர்வரும் காலத்தில் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் இலங்கை வங்கி ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. (ம-7,33,104)


## காணி விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 3 பரப்பு 7.21 குளி விஸ்தீரணமுடைய காணி உடனடி விற்பனைக்கு. பொஸ்கோ பாடசாலைக்கும் பிரிட்டிஸ் கௌன்ஷில்க்கும் மிக அருகாமையிலும் நல்லூர் கோவிலில் இருந்து 1.25 km தூரத்திலும் உள்ளது.
அமைதியான மற்றும் குளிர்மையான மரங்களுடன் கூடிய சுற்றாடல் விலை பேசித் தீர்மானிக்கலாம். (5032)

**075 186 4769, 077 186 4769**


## இதய பூர்வ ...

20ஆம் திகதி வரையில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அவற்றுக்கான குழுவினர் புகையிரதம் மூலம் நேற்றுப் புதன்கிழமை மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளனர்.

கிளீன் ஸ்ரீலங்கா பணிப்பாளர்களான தசுன் உதார, துலீப் சேமரத்தன மற்றும் சாரதா உள்ளிட்டவர்கள் அடங்கிய குழுவினர்களுக்கு யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பு நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், மாவட்ட செயலர் ம.பிரதீபன், புகையிரத நிலைய அதிபர் பிரதீபன், பிரதேச செயலர் சுதர்சன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு புகையிரதத்தில் வந்தோரை வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து புகையிரதத்தில் வந்த குழுவினரால் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திற்கான தொலைக்காட்சிப் பெட்டியொன்றையும் அன்பளிப்பு செய்தனர். (ம-7,33)

## கடற்தொழி...

மயிலிட்டி கடற்தொழிலாளர்கள் மயிலிட்டித் துறைமுகத்தைப் பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக நேற்று நேரில் ஆராயப்பட்டது.

வலி.வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் மயிலிட்டி துறைமுகத்தை தென்னிலங்கை மீனவர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளமை தொடர்பிலும் மயிலிட்டித் துறைமுகத்தை மயிலிட்டி கடற்தொழிலாளர்கள் பயன்படுத்துவதிலுள்ள இடர்பாடுகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பவானந்தராஜா, பிரதேச செயலாளர், துறைசார் உத்தியோகத்தர்கள் ஆகியோர் மயிலிட்டித் துறைமுகப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர். (ம7)


## வேலணை பிரதேச சபை
## 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூர் மீன் கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன், மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.09.2025 தொடக்கம் 31.12.2025 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 14.08.2025 முதல் 27.08.2025 வரை (அலுவலக நாட்களில்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி :- 28.08.2025 (வியாழக்கிழமை) பி.ப 02.00 மணி வரை

கேள்வி திறக்கும் திகதி :- 28.08.2025 (வியாழக்கிழமை) பி.ப 02.00 மணி

கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினைக் குறிப்பிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடிச் சந்தி, வேலணை" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்பட்டல் வேண்டும். "இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 28.08.2025 (வியாழக்கிழமை) ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ .இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | 01.09.2025- 31.12.2025 வரை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | புங்குடுதீவு மீன் மரக்கறி சந்தை | 2,000.00 | ............ | 5,000.00 | 42,535.00 |
| 2 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 14,155.00 |
| 3 | வேலணை அம்பிகை நகர் மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 5,870.00 |
| 4 | சரவணை மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 3,290.00 |
| 5 | நயினாதீவு மீன் மரக்கறிச் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 12,700.00 |
| 6 | துறையூர் மீன் சந்தை | 2,000.00 | ............ | 5,000.00 | 73,335.00 |
| 7 | மண்டைதீவு வாராந்த சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 3,850.00 |
| புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | | |
| 8. | கடை இல - 09 ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 13,670.00 |
| 9. | கடை இல - 10 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 56,840.00 |

இது தொடர்பான மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை,**
**வேலணை.**

(C-3644) 14.08.2025



## தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

உயர்தர இறுதிப் பரீட்சையில் (2025) தோற்றும் மாணவர்களுக்கானபௌதீகவியல் செயன்முறை

மேற்படி பௌதீகவியல் செயன்முறை வகுப்பு 13.10.2025 இல் இருந்து 05 நாட்களுக்குப் பரீட்சை நோக்கில் தொண்டைமானாறில் அமைந்துள்ள வெளிக்கள நிலைய ஆய்வு கூடத்தில் ஒழுங்கு செய்யப்படுகிறது. இதில் பங்குபற்றிப் பயன் பெற விரும்பும் மாணவர்கள் இதில் ஏதாவது ஒரு நாளில் பங்குபற்ற முடியும். 01.09.2025, 02.09.2025 ஆகிய தினங்களில் காலை9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணி வரை பதிவுகளை மேற்கொண்டு அனுமதி அட்டையையும் முன்னாயத்தக் கையேடுகளையும் பெற்றுக் கொள்ளவும். (5033)

**பதிவு மேற்கொள்ள வேண்டிய முகவரி :**
தேசிய வெளிக்கள நிலையம், 133, செம்மணி வீதி, நல்லூர்

**செயன்முறைக்காலம் :** காலை 08.00 - 12.00
மாலை 01.00 - 05.00

மேற்குறித்த காலப்பகுதியில் ஏதாவது ஒரு காலப்பகுதியில் பங்குபற்ற முடியும்.

தொடர்பு இல : 077 704 4120 **செயலாளர்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்;

## விசாரணையில் முன்னேற்றமில்லை!

### இலங்கை குறித்து அமெரிக்க ராஜாங்க திணைக்களம் அறிக்கை

**(வோஷிங்டன்)**

**இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதில் சிறிதளவு முன்னேற்றம் கூட ஏற்படவில்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2024 இல் உலக நாடுகளில் காணப்பட்ட மனித உரிமை நிலவரம் குறித்த தனது ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்கம் இலங்கை குறித்தும் குறிப்பிட்டுள்ளது.

காணாமல் போதல் கடத்தல் குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அரசாங்க அதிகாரிகளால் எவரும் காணாமலாக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை. கடந்த வருடம் காணாமல் போனவர்கள் அல்லது பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என காணாமல் போனவர்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

1983 முதல் 2009 வரை இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போதோ அல்லது 1988-89 மார்க்சிச கிளர்ச்சியின் போதோ இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை துஷ்பிரயோகங்களை விசாரிப்பதில் சிறிதளவு முன்னேற்றம் கூட ஏற்படவில்லை.

யுத்தகால துஷ்பிரயோகங்கள் விடயத்தில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலும் பொறுப்புக் கூறல் இன்மையும் இன்னமும் பிரச்சினைக்குரிய விடயங்களாக காணப்படுகின்றன. யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் இடம்பெற்ற காணாமல் போதலிற்கு தீர்வு காணப்படவில்லை.

காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்கள் விசாரணைகள் அரசாங்கம் மற்றும் காணாமல் போனோர் அலுவலகத்திடமிருந்து பதில்கள் இன்மை போன்றவற்றில் போதிய முன்னேற்றம் இன்மையால் விரக்தியடைந்துள்ளனர்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவைக்கு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் சமர்ப்பித்த அறிக்கையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் காணாமல் போனோர் அலுவலகத்திற்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஆணை உள்ள போதிலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களிற்கான நிதி உதவி தகுதியை மதிப்பிடுதல் போன்ற விடயங்களிலேயே கவனம் செலுத்தியுள்ளது.

இந்த அணுகுமுறை குடும்பங்கள் மேலும் ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டிய சுமையை சுமத்தியுள்ளது. இது பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் மனக்காயங்களிற்கு உட்படுத்தியுள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தெரிவித்திருந்தது.

2008- 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பில் 11 பேர் கடத்தப்பட்டது மற்றும் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கராணகொடவும் தொடர்புபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய

அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.07.2025 செவ்வாய்க்கிழமை
அன்று இறைபதமெய்திய எமது குடும்ப ஒளிவிளக்கு

அமரர். தம்பிப்பிள்ளை மணிசுந்தரம்
(ஓய்வு நிலை அதிபர்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 14.08.2025 வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் அன்புத்தலைவரின் பிரிவுத்துயர் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும், பத்திரிகை, அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள், பனர்கள், முகநூல் பதிவுகள், அஞ்சலியுரைகள் என்பவற்றின் மூலம் பிரிவுத் துயரில் குடும்பத்தினருக்கு ஆறுதல் வழங்கியதுடன் உரிய நேரத்தில் உணவுப் பண்டங்களையும் வழங்கிய பேரன்புக்குரிய உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் குடும்பத்தின் சார்பில் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கலட்டி வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 652 9186


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



தோற்றம்
09.10.1955

மறைவு
26.07.2024

அமரர்

# துரைராசா இராசமலர்

ஆண்டு ஒன்று ஆனது அம்மா! மாநிலத்தில் நீ பிரிந்து!
தீராத துயரத்தில் தேம்புகின்றோம் நாம் இங்கு!
உறவுகளைத் தவிக்கவிட்டு இமைகளை மூடிவிட்டாய்!
எம்மையெல்லாம் அழவிட்டு முருகனை நாடிவிட்டாய்!
உன்னை எண்ணித் தினம் தினம் மனம் வெதும்புகின்றோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டுகின்றோம்!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
மகன் - திரு.து.நிருஷன் (LLB)
இயக்குநர் யாழ்.ஆசான் வெளியீடு

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(536)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 112 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம்

**1. விவேகானந்தன் உமாசுதன்**
**2. உமாசுதன் ஆனந்தபிரியதர்சினி**
45/2, 1/3, டி அல்விஸ் பிளேஸ், தெகிவளை

**மனுதாரர்கள்**

வழக்கு இல: TR/198/2025

**ராஜசிங்கம் தர்ஷக**
13B, 55 ஆவது ஒழுங்கை, கொழும்பு 6

**எதிர்மனுதாரர்**

மேற்படி இலக்க வழக்கின் மனுதாரர்களால் பின்வரும் ஆதன அட்டவணையில் நன்கு விரிக்கப்படும் ஆதனமும் அதில் அமைந்திருக்கும் சுப்பிரமணிய பெருமாள் ஆலயமும் இரண்டாம் மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற உரித்தாக்கற் கட்டளைக்கும் (vesting order) தீர்ப்பிற்கும் கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வடமராட்சிப் பகுதி, கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மழவராய குறிச்சியிறை **"சுளவை"** நிபர 18, மேற்படி பெற்றயினார் குறிச்சியிறை **"சுளவை"** நிபர 33 3/4 மேற்படி **"சுளவை"** நிபர 8 3/4 மேற்படி **"சுளவை"** நெற்பர 30 இப் பிரிவுகளுக்கு யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 6841 ஆம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் கடைசித் தீர்வையோடு அணைக்கப்பட்டிருப்பதும் உலாந்தா மேஸ்தர் கதிர்காமர் கணபதிப்பிள்ளையால் 2090 ஆம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டிருப்பதுமாகிய படத்தின்படி நிபர 85 குளி 6. இதில் 1 ஆம் நம்பர் துண்டுக்கு நிபர 28 குளி 8, 2 ஆம் நம்பர் துண்டுக்கு நிபர 7 குளி 2. இத்துண்டுகள் தற்போது ஒரே துண்டாயிருக்கின்றன. இதன்மொத்த விசாலம் **நிலப்பரப்பு முப்பத்தைந்து குளி பத்து** (நிபர 35 குளி 10) உம் அதற்குப்பட்ட நிலம் பனைகள் வடலிகள் மாமரம் அனைத்தும்.

இதற்கு எல்லைகள்

**கிழக்கு** : ஆழ்வார் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
**வடக்கு** : கந்தவனம் நடராசாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
**மேற்கு** : ஒழுங்கை
**தெற்கு** : வேலன் சின்னப்பொடியனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இடதங்களும்

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19 ஆம் நாளன்று இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
**பருத்தித்துறை**
(றபர் முத்திரையிடப்பட்டுள்ளது)

திகதி: 31.07.2025

(5030)

# அதிகரிக்கும் தொழுநோய் பாதிப்பு

(கொழும்பு)

மொரட்டுவ - எகொடஉயன வில் தொழுநோய் பாதிப்பு அதிகரித்து வருவது குறித்து சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். கடந்த ஆறு மாதங்களில் ஆறு சிறுவர்கள் உட்பட 23 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் சந்தேகத்திற்கிடமான 31 பேருக்கு தோல் மருத்துவ மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு, ஒன்பது சிறுவர்கள் உட்பட 45 நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். தொழு நோய் குணப்படுத்தக் கூடியது. ஆனால் நோயாளிகள் நோயை மறைப்பது குணமாவதை தாமதப்படுத்துவதுடன் நிலைமையை மோசமாக்குகிறது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மருத்துவமனைகளில் இரகசியத்தன்மை பராமரிக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஆதன உரிமை பெயர் மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேச சபை | :- தெல்லிப்பளை உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- **சின்னத்தம்பி செல்வராசா பெண் கருணகலா** |
| விண்ணப்பதாரர் பெயர் | :- **சின்னத்தம்பி செல்வராசா பெண் கருணகலா** |
| முகவரி | :- **மயிலங்கூடல், இளவாலை** |

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 11, குப்பிளாக்கடவை வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 03.12.2024 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திரு.சிவலிங்கம் ரிஷிகேஷன் அவர்கள் முகதாவில் இலக்கம் 286 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களால் அளந்து வரைந்த 3014 ஆம் இலக்க 28.05.2011 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு -1 ஆக காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை மேற்கு இறை "நிறையப்புலம்" நிலப்பரப்பு பதினைந்து (நில.பர 15) இது இளவாலை வடக்கு (J/221) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு :- ஒழுங்கை
வடக்கு :- ஒழுங்கை
மேற்கு :- வைத்திலிங்கம் அம்பலவாணரின் ஆதனம்
தெற்கு :- மகேந்திரராசா கிருஷ்ணாவின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை **சின்னத்தம்பி செல்வராசா பெண் கருணகலா** என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(5029)

# இராசிபலன்

**14.08.2025**
**ஆடி 29, வியாழக்கிழமை**
**பஞ்சமி காலை 6.29 மணிவரை**

**சஷ்டி பின்னிரவு 4.09 மணிவரை**
**ரேவதி முற்பகல் 11.46 மணிவரை**
**சுப நேரம் 7.35-9.05 மணிவரை**
**இராகுகாலம் 1.35-3.05 மணிவரை**

**சந்திராஷ்டமம்:**
**உத்தரம், அத்தம்**

**வளவன்**


மேஷம்

கனவுப் பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.


துலாம்

சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


மகரம்

பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.


சிம்மம்

தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

பொது வாழ்வில் புகழ் கூடும், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், உடல் நலனில் முன்னேற்றம் காணும் நாள்.


கும்பம்

பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


மிதுனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை காண கூறலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


மீனம்

பணவரவு திருப்தி தரும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சரியான வாய்ப்பு வந்தால் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு" நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளீன் சிறீலங்கா செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக "இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு - ஒற்றுமையின் தூய்மையான பயணம்" எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை வடமராட்சி பிரதேசத்தில் பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய மூன்று பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை இம் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஆட்பதிவுச் சேவை, பிறப்பு - இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள் - கண் பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுக்குரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன.(8-60)

## செல்லப்பா சுவாமிகளின் குருபூஜை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூஜை நிகழ்வு இன்று வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்அபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, காலை 9.00 மணி தொடக்கம் திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து காலை 11 மணிக்கு "நல்லூர் தேரடி" எனும் தலைப்பில், ஓய்வு நிலைஅதிபர் ஆ.சிவநாதன் உரையாற்றவுள்ளார். (8)

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபமும் இணைந்து நடத்தும் "தெய்வீக இசையரங்கு" இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள், வயலின் - இ.நிறோசன், மிருதங்கம் - ஞா.வசந், கெஞ்சிரா - செல்வன் புவனேஸ்வரன் வேணுகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு - ப. சிவமைந்தன், வயலின் - இ.நிறோசன், மிருதங்கம் - வ.நமண சர்மா, கெஞ்சிரா - செல்வன் நமணசர்மாலய சர்மா, முகர்சிங் - செல்வன் நமணசர்மா கானாமிருதசர்மா, கடம் - செல்வன் உதயகுமார் ஹிது சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர் . (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 150 | 200 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 340 | 350 | 300 | 300 |
| கரட் | 500 | 600 | 600 | 600 | 600 |
| பூசணி | 100 | 160 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-250 | 300 | 220 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 500 | 300 | 450 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 350 | 220 | 250 |
| பீற்றூட் | 150 | 100 | 180 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 400 | 200 | 300 |
| போஞ்சி | 700 | 800 | 800 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 100 | 100 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 900 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 200 |

## கடும் காற்று வீடு சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் கடந்த 11 ஆம் திகதி அதிகாலை காற்றுடன் மழை கொட்டி தீர்த்ததன் காரணமாக பொலிகண்டி பகுதியில் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

பொலிகண்டி மேற்கு பகுதியில் குடியேற்ற திட்டத்தில் உள்ள வைரமுத்து பரமானந்த ராஜா என்பவரது வீட்டுக் கூரையே பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (8-60)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர்சங்கத்தால் ஆண்டுதோறும் முன்னெடுக்கப்படும் வீரபாரம்பரிய விளையாட்டான மாட்டுவண்டில் சவாரிப்போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 1 மணிக்கு அராலி புனவோடை சவாரித்திடலில் இடம்பெறவுள்ளது.

5 பிரிவுகளாக இடம் பெறவுள்ள இச் சவாரிப்போட்டியின் ஒவ்வாரு பிரிவுகளிலும் முதலிடம் பெறும் வெற்றியாளர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படவுள்ளதுடன் ஏனைய 2ஆம், 3ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் இடங்களை பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (8)

## நல்லூரான் திருவடிக்கு.. இன்று 17 ஆம் நாள் திருவிழா



### கா! நல்லைக் குமரேசனே!

ஆணவத் தொடுநின்ற ஐயன்பிர மாவையே
அறிந் "ஓம்" இன் விளக்கங்கோர
நாணியே நிற்கவவர் புல்லறிவை மாற்றியொரு
நல்லறிவை மெல்லவிளைத்தாய்
ஆணித்த நங்கொண்டு அப்பனுக் குபதேசம்
அப்போது செப்பியுயர்ந்தாய்
ஆணிப்பொன் வடிவமே மாணிக்கப் படிமமே
அருள்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

### கந்தன் கருணை

அழகன் முருகனிடம் ஆறாத் துயர்தனை
சொல்லவே ஓடோடி வந்தேனே உன் பாதம்
சரணமய்யா உன் கருணைக் கண்ணால்
என்னைப் பாருமையா கவலையெல்லாம் - தீருமே
கந்தன் கருணை எமக்கு வேண்டிடவே - உம்மை
நாடி வந்தேனே அடியேன் தரிசனம் கிடைக்கவே
துயர் துடைக்க நாம் யாரிடம் போவோம்
கேட்டவரம் கிடைக்க வரம் தருவாயல்லவா
கோடான கோடி பக்கதர்கள் கண் கலங்கிட
நீ வலம் வரும் காட்சியைத் தரிசிக்கவே
கோடி கண்கள் அல்லவா வேண்டுமே

எஸ்.பி தனா, தெல்லிப்பழை.

### விதியை மாற்றிடப்பா

ஆறுமுகத்தானே அல்லல் தீர்க்கும் வேலவனே!
ஆவலுடன் உனைப் போற்றி வேண்டி
போற்றிடும் மக்களின் இத் துயரம்
போக்கிடுவாய் நல்லூர்க் காவலனே!

கொற்றாவத்தை, காந்திமதிநாதன்.

### அருள் பொழிவாய்!

சரவணப் பொய்கையில் உதித்தவனே
சண்முகனாய் அவ தரித்தவனே
பிரணவப் பொருளதை உரைத்தவனே
பிரமனைச் சிறையில் அடைத்தவனே
சரணமெண் றடைவோர் தமைக்காத்து
சஞ்சலம் தீர்த்தருள் புரிபவனே
அரவணை மாயன் மருமகனே
அம்பிகை சுதனே அருள் பொழிவாய்!

கலைவாரிதி- நயினை இராகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் சமீபத்தில் செவனபிட்டிய மற்றும் கிராந்துருகோட்டையில் இரண்டு புதிய "முகவர் வணிக மேம்பாட்டு மையங்களை" திறந்து லவத்தது, இது வட மத்திய மாகாணத்தில் அதன் இருப்பை விரிவுபடுத்துகிறது.

## புதிய தொலைபேசி இலக்கம் பொலிஸாரால் அறிமுகம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொள்ளும் வகையில், பொதுமக்களுக்காக புதிய வட்ஸ்அப் தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, பொதுமக்கள் அனைவரும் 071- 859 8888 என்ற வட்ஸ்அப் தொலைபேசி இலக்கம் ஊடாக முறைப்பாடுகளை கூற முடியும் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த வட்ஸ்அப் தொலைபேசி இலக்கம் ஊடாக காணொளிகள் அல்லது புகைப்படங்கள் தொடர்பான முறைப்பாடுகளையும் அளிக்க முடியும் என பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். (ஙி)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி. மாலினி விஜயகுமார்**



அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

[1438]


## பேருந்துகளில் ஏ.ஐ கமரா

(கொழும்பு)

நீண்ட தூர பேருந்துகளில் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கான ஒரு முன்னோடித் திட்டம் தனியார் துறையின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரச மற்றும் தனியார் பேருந்துகளில் செயற்கை நுண்ணறிவு (AI) கமரா அமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் கீழ் ஓட்டுநர் நடத்தையைக் கண் காணிக்கவும் தேவைப்படும் போது எச்சரிக்கைகளை வழங்கவும் AI கமராக்கள் பேருந்துகளில் நிறுவப்படவுள்ளன.

இந்த அமைப்பு மூலம் ஓட்டுநர் சோர்வு, மயக்கம் அல்லது கண் மூடல் போன்ற அறிகுறிகளைக் கண்டறிய முடியும். அத்துடன் போக்குவரத்து விதிகள் மற்றும் ஆசனப்பட்டி பயன்பாடு ஆகியவற்றின் இணக்கத்தைக் கண்காணிக்க முடியும்.

இது ஓட்டுநர்களுக்கு சமிக் ஞைகளை வழங்கும் மற்றும் பேருந்தை கட்டுப்படுத்தவும் உதவும்.

இந்த திட்டத்தின் முதல் கட்டம் கதிர்காமம் பேருந்து சாலையில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நீண்ட தூர பேருந்துகளில் 40 AI கமராக்கள் முதற்கட்டமாக பொருத்தப்படவுள்ளன. (ஙி)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

தொடர்புகளுக்கு

**077 839 3974, 076 889 1308**


# புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க திருத்தச்சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக கடமை புரியும் திரு. கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்ட 2021.07.01ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 13 கிளைகளுக்குமான அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

**கிளைப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்**

**2025.08.16 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் | காலம் | நேரம் | கிளைப்பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | புலோலி தெற்கு | திரு. சற்குணசிங்கம் பிரேமிலன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | புலோலி மெ.மி.த.க.பாடசாலை |
| 2 | 2 | புலோலி மேற்கு | திரு. வீரசிங்கம் இரத்தினகாந்தன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | திருநாவலூர் சனசமூக நிலையம் |
| 3 | 3 | தம்பசிட்டி | திரு. கந்தசாமி சசிகரன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை |
| 4 | 5 | குரும்பகட்டி | திரு. வல்லிபுரம் நிதர்சன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | குரும்பகட்டி சனசமூகநிலையம் |
| 5 | 6 | பெரியதேவன் | திரு. சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | பெரியதேவனத்தாய் சனசமூக நிலையம் |
| 6 | 7 | புலோலி வடக்கு | திரு. சண்முகம் சசீந்திரன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | புலோலி.ப.நோ.கூ.சங்க தலைமைக்காரியாலய மண்டபம் |
| 7 | 8 | வியாபாரிமூலை | திரு. விநாசித்தம்பி சிவபாலன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | வியாபாரிமூலை பொதுநோக்கு மண்டபம் |
| 8 | 9 | வல்லிபுரக்குறிச்சி | திரு. அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | வல்லிபுரக்குறிச்சி பொதுமண்டபம் |
| 9 | 10 | அல்வாய் வடக்கு | திரு. பொன்னம்பலம் கோகுலன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | அல்வாய் வடக்கு இளங்கோ பொதுமண்டபம் |
| 10 | 11 | புலோலிகிழக்குமத்தி | திரு. சந்திரலிங்கம் சுவர்ணன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | புலோலி கிழக்கு சனசமூக நிலையம். |
| 11 | 12 | கற்கோவளம் | திரு. சிவசிதம்பரம் சிறீதரன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | கற்கோவளம் மாதர் சங்கம் மண்டபம் |
| 12 | 13 | புலோலிதென்மேற்கு | திரு. நாகமுத்து ஜெயவதனன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் முன்பள்ளி |
| 13 | 23 | புற்றளை | திரு. கனகரட்ணம் திசாகரன் | 2025.08.16 | மு.ப.10.00 மணி | புற்றளை சனசமூக நிலையம் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கு தகுதியுள்ள எவரேனும் உறுப்பினருக்கு தனிப்பட்ட அறிவித்தல் கிடைக்காது விடினும் இந்த அறிவித்தலை அடிப்படையாக கொண்டு தமக்குரிய கிளையின் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.


**கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை**
**857,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.** (சி-3642)

**ஒப்பம். திரு.கிறகோரி சந்திரசேகரன்**
**கூ.அ.உ.ஆணையாளர், யாழ் மாவட்டம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 5 ஆண்டுகளில்
### சந்திரனில் அணுமின் நிலையம்
### நாசா அறிவிப்பு



(வோஷிங்டன்)
அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, இன்னும் 5 ஆண்டுகளில் சந்திரனில் அணுமின்னுற்பத்தி நிலையத்தைத் தொடங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவும், இன்னும் 10 ஆண்டுகளில் சந்திரனில் அணுமின்னுற்பத்தி நிலையம் அமைக்கத் திட்டமிட்டிருப்பதாக ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாசா, மனிதர்களை மீண்டும் நிலவுக்கு அனுப்பும் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, நிலவில் மனிதர்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும் மையமாக இந்நிலையம் செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரனில் அணு உலை அமைப்பது புதுமையானதாக இருந்தாலும், அது சட்டவிரோதமானது அல்ல எனவும், பொறுப்புடன் பயன்படுத்தப்பட்டால், இந்நடவடிக்கை சந்திரன் தொடர்பான ஆய்வுகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் விண்வெளிப் பயணங்களுக்கான தொழில்நுட்ப பரிசோதனைகளுக்கு உதவக்கூடும் எனவும் நாசா தெரிவித்துள்ளது. (நி)

## ராஜஸ்தானில் கோர விபத்து!
- 7 சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழப்பு
- 22 பேர் படுகாயம்

(டில்லி)
ராஜஸ்தானில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 7 சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர். ராஜஸ்தானின் தவுசா மாவட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஆலய தரிசனம் செய்து விட்டு வானில் வீடு திரும்பிய வர்கள் மீது லொறியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் இவ்விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் வானில் பயணம் செய்த 7 சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 22 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்திற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அதிகாலை நேரத்தில், இவ் விபத்து நடைபெற்றுள்ளதால், நித்திரைக் கலக்கத்தில் விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. (நி)

# வர்த்தக பதற்றங்களு...
# மோடி - ட்ரம்ப் ...

(டில்லி)

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்திற்காக அமெரிக்கா செல்ல வாய்ப்புள்ளது. மேலும் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் ஒரு சந்திப்பை நடத்த இதன்போது திட்டமிட்டுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோளிட்டு இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



ட்ரம்பைத் தவிர, பிரதமர் மோடி உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி உள்ளிட்ட வெளிநாட்டுத் தலைவர்களுடனும் உயர்மட்ட சந்திப்புகளை நடத்துவார் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா. பொதுச் சபை உச்சி மாநாடு செப்ரெம்பரில் நியூயோர்க் நகரில் நடைபெறும்.

செப்ரெம்பர் 23 ஆம் திகதி தொடங்கும் வாரத்தில் உலகத் தலைவர்கள் வரத் தொடங்குவார்கள்.

இந்தச் சந்திப்பு நடந்தால், இந்த ஆண்டு பெப்ரவரியில் இந்தியப் பிரதமர் மோடி வெள்ளை மாளிகைக்குச் சென்ற பின்னர் ஏழு மாதங்களில் இரு தலைவர்களின் இரண்டாவது சந்திப்பாக இது அமையும். மோடியைச் சந்திக்க ட்ரம்பும் ஆர்வமாக இருப்பதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூன் மாதம் பிரதமர் G7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள கனடா சென்றிருந்தபோது, வோஷிங்டனுக்கு வருமாறு ட்ரம்ப் மோடியை அழைத்தார்.

பின்னர், அந்த நேரத்தில் அமெரிக்காவிலேயே இருந்த பாகிஸ்தான் இராணுவத் தலைவர் அசிம் முனீருடன் ஒரு சந்திப்பை ட்ரம்ப் ஏற்பாடு செய்வார் என்ற காரணத்தால் மோடி அழைப்பை நிராகரித்தார்.

இந்தச் சந்திப்பு நல்ல படியாக நடந்தால், ஒக்டோபரில் நடைபெற உள்ள QUAD உச்சிமாநாட்டிற்கு இந்தியா வருமாறு பிரதமர் மோடி ட்ரம்பை நேரில் அழைப்பார் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

அவுஸ்திரேலியாவும் ஜப்பானும் QUAD இன் மற்ற உறுப்பினர்கள். ட்ரம்பின் முதல் பதவிக் காலத்தில், அவரும் பிரதமர் மோடியும் ஒரு தனிப்பட்ட பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

இருப்பினும், ஜனாதிபதி மோடியை பலமுறை "நண்பர்" என்று அழைத்த போதிலும், ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக்காலத்தில் வரிகள் குறித்து கடுமையாகப் பேசியதால் அந்த நட்புறவு சீர்குலைந்துள்ளது.


அதேநேரம், வர்த்தக ஒப்பந்த முட்டுக்கட்டைக்கு மத்தியில், ட்ரம்ப் இந்தியாவின் மீது 25% வரியையும், ரஷ்ய எண்ணெய் தொடர்ந்து வாங்குவதால் கூடுதலாக 25% வரியையும் விதித்தார். இதனால் மொத்த வரி 50% ஆக உயர்ந்தது.

இரு நாடுகளிடையேயான உறவினை சிக்கலாக்கியது.

இந்தியப் பொருட்கள் மீதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளுக்கு மத்தியில் ... சந்திப்பு?



ட்ரம்பின் 50% வரிகளில் 50 சத வீதமானவை ஆகஸ்ட் 7 ஆம் திகதி அமுலுக்கு வந்தாலும், மீத முள்ளவை ஆகஸ்ட் 27 ஆம் திகதி அமுலுக்கு வர உள்ளன.

அந்த காலக்கெடுவுக்கு முன், இந்தியாவும் அமெரிக்காவும் வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கான பரபரப்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே ஒரு முக்கிய பிரச்சினையாக மாறியுள்ள மற்றொரு முக்கிய பிரச்சினை, டில்லி ரஷ்ய எண்ணெய் வாங்குவது என்று வெள்ளை மாளிகை கூறுகிறது.

ரஷ்யாவின் எண்ணெய் கொள்முதல் தொடர்பாக இந்தியாவை ட்ரம்ப் கடுமையாகக் கண்டித்து வருகிறார்.

மேலும் ஒரு முக்கிய வர்த்தக கூட்டாளியை அச்சுறுத்துவது மொஸ்கோவை உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர கட்டாயப்படுத்தும் என்ற நம்பிக்கையில் இறக்குமதிகளைக் குறைக்குமாறு டில்லியை அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இருப்பினும், அமெரிக்காவை குற்றம்சாட்டியும், அமெரிக்க நிறுவனங்கள் ரஷ்யாவிலிருந்து யுரேனியம், இரசாயனங்கள் மற்றும் உரங்களைத் தொடர்ந்து வாங்குவதாகவும் சுட்டிக்காட்டி இந்தியா விமர்சனத்தை கடுமையாக எதிர்த்துள்ளது.

இந்த முன்னணியில், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்துவரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தீர்மானத்தைப் பற்றி விவாதிக்க ஆகஸ்ட் 15 அன்று ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு இடையிலான சந்திப்பை இந்தியா உன்னிப்பாகக் கண்காணிக்கும். (நி)

## தென்கொரியா - அமெரிக்கா இணைந்து உச்சி மாநாட்டினை நடத்தத் தீர்மானம்



(வோஷிங்டன்)

தென்கொரிய ஜனாதிபதி லீ ஜே மியோங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இணைந்து இம்மாதம் 25ஆம் திகதி வோஷிங்டனில் முதன்முறையாக உச்சி மாநாடு ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இம்மாநாட்டில் இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு கூட்டாண்மை, பொருளாதார ஒத்துழைப்பு, மற்றும் தொழில்நுட்ப மற்றும் உற்பத்தித்துறைகளில் விரிவான கூட்டாண்மையை மேம்படுத்தும் வழிகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, முக்கிய கனிமங்கள், குறைகடத்திகள் பட்டரிகள் மற்றும் கப்பல் கட்டுமானத்துறைகளில் இணைந்து செயற்படுவது, வரிவிதிப்புகள் மற்றும் வர்த்தகச் சவால்களை சமாளிப்பது போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உச்சி மாநாடு, இரு நாடுகளுக்கு இடையேயும் காணப்படும் உறவு, பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அம்பானி ஆலையை அழிப்போம்! பாகிஸ்தான் இராணுவத்தளபதி கொக்கரிப்பு

(இஸ்லாமாபாத்)

தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் படத்தைச் சுட்டிக் காட்டி, "இந்தியாவின் பொருளாதாரத்தை சீர்குலைப்போம் விலைமதிப்பற்ற வளங்களை குறிவைத்து தாக்குவோம்," என, பாகிஸ்தான் இராணுவத் தளபதி அசிம் முனீர் மிரட்டல் விடுத்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம், காஷ்மீர், பஹல்காமில் பயங்கரவாதிகளை அனுப்பி அப்பாவிச் சுற்றுலா பயணியரை கொன்று குவித்தது பாகிஸ்தான். மே 7 முதல் 10 வரை நடந்த, "ஆப்ரேஷன் சிந்தூர்" எனும் அதிரடிப் போரில், நம் நாடு பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி தந்தது. போரில் நிலைகுலைந்த பாகிஸ்தான், "எங்களை தாக்க வேண்டாம். இத்தோடு நிறுத்திவிடுங்கள்" என கெஞ்சிக் கதறியது. இதனால், போரை தற்காலிகமாக நிறுத்துவதாக இந்தியா அறிவித்தது.

தற்போது, அமெரிக்காவின் நிழலில் தஞ்சமடைந்து, இந்தியாவுக்கு எதிராக மீண்டும் கொக்கரிக்கத் தொடங்கியுள்ளது பாகிஸ்தான். போரின்போது பதுங்கு குழிக்குள் வசித்து வந்த பாகிஸ்தான் இராணுவத் தளபதி அசிம் முனீர், ட்ரம்ப் அழைப்பின்பேரில் தற்போது இரண்டாவது முறையாக அமெரிக்கா சென்றுள்ளார்.

புளோரிடாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அசிம் முனீர் பேசுகையில், "சிந்து நதி, இந்தியர்களின் குடும்பச் சொத்து அல்ல பாகிஸ்தானுக்கும் சொந்தமானது.

சிந்துநதியின் குறுக்கே இந்தியா அணைகட்டி வருகிறது. அது கட்டி முடிக்கும் வரை காத்திருப்போம். பணிகள் முடிந்ததும், 10 ஏவுகணைகளை வீசி, அணையைத் தகர்த்து விடுவோம். அணு ஆயுத நாடான பாகிஸ்தானுக்கு எதிராக அச்சுறுத்தல் எழுந்தால், உலகின் பாதி நாடுகளை அழித்துவிடும் வல்லமை இருக்கிறது," எனக் கூறியுள்ளார்.

குஜராத் ஜாம்நகரில், அரபிக்கடலை ஒட்டி, தொழிலதிபர் முகேஷ் அம்பானியின், ரிலையன்ஸ் நிறுவன கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உள்ளது.

கடல்வழி மற்றும் வான் வழித்தாக்குதல் மூலமாக இந்த இடத்தை எளிதாக தாக்க முடியும் என்று அசிம் முனீர் மறைமுகமாக மிரட்டி உள்ளார். நம் நாட்டின் பொருளாதார கட்டமைப்பை குறிவைத்து அசிம் முனீர் பேசுவது இது முதல்முறை.

பாகிஸ்தானை பொறுத்த வரை ஆட்சியாளர்களை விட இராணுவத்துக்கு அதிகாரம் அதிகம். அதனால் தான் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகமும், இராணுவ தளபதி அசிம் முனீரை அடிக்கடி அழைத்து, விருந்து கொடுத்து கௌரவித்து வருகிறது. மத பழமைவாதியான அசிம் முனீர், அமெரிக்க மண்ணில் இருந்து, ட்ரம்ப் ஆசியுடன் வாய்க்கு வந்தபடி உளறி வருவது, இருநாடுகள் இடையேயான பதற்றத்தை அதிகரித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விரைவில் இலங்கை வரும் அசாத்?

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் ஊடகச் செயலாளரான அசாத் மௌலானா, வெகுவிரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்கும் தொடர்புகள் இருப்பதாக அசாத் மௌலானா என்றழைக்கப்படும் ஹன்சீர் முஹம்மத் பரபரப்பு தகவல்களை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் பிள்ளையானின் வேண்டுகோளின் பிரகாரம் பிள்ளையானுக்கு நெருக்கமான தான் உள்ளிட்ட குழுவொன்று இராணுவப் புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே உடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

தற்போதைக்கு அசாத் மௌலானா வெளிநாட்டில் தலைமறைவாக வாழ்ந்து வரும் நிலையில் கடுமையான முயற்சிகளின் பின்னர் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

அதன் பிரதிபலனாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவும், அது தொடர்பில் விரிவான வாக்குமூலம் ஒன்றை வழங்கவும் அசாத் மௌலானா இலங்கை வர சம்மதம் தெரிவித்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

வெகுவிரைவில் அவரை இலங்கைக்கு அழைத்து வரும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்திருப்பதாகவும்தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)


## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பணி நிலை வெற்றிடம்
## வெளிவாரி விண்ணப்பம் கோரல்

பின்வரும் விபரப்படியான பதவிக்கு வெற்றிடம் நிரப்புவதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01.பொதுமுகாமையாளர் பதவிவெற்றிடம் - 01**

| | |
|---|---|
| **சம்பள குறியீட்டு இல -** | **101/06** |
| சம்பள அளவுத் திட்டம் | 37045-490 x 10-540×10-47345 |
| (சுற்றுநிருபம் 02/2025படி) | 444540-5880 x 10-6480x 10-568140 |

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 07ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 08ஆவது சம்பளத் திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்/அதற்குச் சமனான தகைமை.

இத்தகைமையானது கணக்கியல்/வியாபாரப் புள்ளி விபரவியல்/வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/முகாமைத்துவம்/வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த உயர் தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலைப்பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 8 ஆண்டு கால அனுபவம்.

**02.களஞ்சியமுகாமையாளர்/கிளைமுகாமையாளர் பதவிவெற்றிடம் 05**

| | |
|---|---|
| **சம்பளக் குறியீட்டு இல -** | **208/16** |
| சம்பள அளவுத் திட்டம் - | 31975-335 x 10-350×10-38825 |
| (சுற்றுநிருபம் 02/2025 படி) | 383700-4020x10-4200×10-465900 |

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 2 ஆண்டுகால அனுபவம். /

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி/க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது 06 பாடங்களுடனான சித்தி.

**நிபந்தனைகள்**

01) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சுற்று நிருபத்திற்கு அமைவாக கொடுப்பனவு வழங்கப்படும்.

02) விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். (கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தாங்கள் கடமைபுரியும் கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள் தமது கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

03) சங்கம் கோரும் பிணைப்பணத்தினை ரொக்கமாகச் செலுத்துவதுடன் சங்கம் கோரும் ஆதனப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.

04) விண்ணப்ப முடிவு திகதி 2025.08.30

05) சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்து அவற்றிக்குரிய சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளினையும் இணைத்து 2025.08.30ஆம் திகதிக்கு முன்னர் **"தலைவர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**தெல்லிப்பழை.**

**2025.08.14**

(நி-3643)


## இன்று ஒரு தகவல் 426

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# நல்ல பார்வை!

என்ன சார் உலகம் இது? நடக்கின்ற நடப்பு ஒன்றும் சரி இல்லை?என்று அலுத்துக்கொண்டார் ஒருவர்.

"என்ன இது. இப்படி ஒரே அடியாக அலுத்துக் கொள்கிறீரகளே..?" என்று கேட்டேன்.

பின்பு என்ன சார்... நல்ல விடயமே கண்ணிலே படவில்லை எல்லாம் மோசமாக இருக்கிறது...!" என்றார் அவர்.

"சார்... கொஞ்சம் உட்காருங்கள்... உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்!" என்று ஆரம்பித்தேன்.

ஒரு பெரியவர் (சத்யசாய்பாபா) சொன்ன கதையை அவரிடம் சொன்னேன். அது என்ன கதை? என்றார்

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவருக்குத் திடீரென்று ஒருநாள் தலை வலிக்க ஆரம்பித்தது!

ராஜா என்பதாலே தலைவலிகூட வராமல் இருந்துவிடுமா என்ன..? பெரிய தலைவலியே வந்துவிட்டது.

அரண்மனையிலே வைத்திய வசதிக்கு என்ன குறைச்சல்?

நிறைய வைத்தியர்கள்... ஒவ்வொருத்தராக வந்தார்கள்...

ஒவ்வொரு விதமான மருந்தை கொடுத்தார்கள்.

ஒன்றாலேயும் தலைவலி நிற்கவில்லை! தலைவலிக்கு என்ன காரணம் என்பதை அவர்களாலே சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை!

தலைவலி தொடர்ந்து இருந்துகொண்டே இருந்தது!

என்ன செய்யலாம் என்று எல்லாரும் யோசனை செய்தார்கள்.

அமைச்சர் ஒருவர் ஒரு ஆலோசனை சொன்னார்.

"காட்டிலே ஒரு முனிவர் இருக்கிறார்.. அவரைக் கூப்பிட்டு கொண்டு வந்து காட்டினால் ஏதாவது யோசனை சொல்லுவார்!" என்றார்..

"சரி.. போய் கூட்டிக்கொண்டு வாருங்கள்!" என்று உத்தரவு போட்டார் ராஜா.

முனிவரைப் போய் அழைத்துக் கொண்டு வந்தார்கள் அவர் வந்து பார்த்தார்

மன்னா! மருந்துகள் மூலமாக உன்னுடைய தலைவலியை குணப்படுத்த முடியாது! நீ எங்கே போனாலும் வந்தாலும் பச்சை வர்ணம் உன் கண்ணிலே படுகின்ற மாதிரி பார்த்துக்கொள்! பச்சை நிறம் கண்ணுக்கு நல்லது! பச்சை கலரை அதிகமாக பார்த்துக்கொண்டிருந்தால் உன் தலைவலி பறந்து போய்விடும். இதுதான் அதற்கு வைத்தியம்!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அடுத்த நாளே அந்த ராஜா மந்திரிகளோட ஆலோசனை நடத்தினார்.

அரண்மனை முழுவதும் பச்சைக் கலர் பெயிண்ட் அடிக்கச் சொன்னார். ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் பச்சைக் கலர் சட்டைதான் போட வேண்டும். வீடுகளுக்கெல்லாம் பச்சை வர்ணம் பூச வேண்டும்.

பச்சைக் கலரைத் தவிர வேறு எந்தக் கலரும் ராஜா கண்ணிலே படக்கூடாது என்று கடுமையான உத்தரவு போட்டு விட்டார்.

கொஞ்ச நாளிலே அந்த நாட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும் பச்சைக் கலர்தான். பசுமைப் புரட்சி தான்.

காட்டுக்குப் போன அந்த முனிவர் கொஞ்சக்காலம் கழித்து மறுபடியும் அரண்மனைக்கு வந்தார். ராஜாவினுடைய தலைவலி எப்படி இருக்கு என்று பார்த்துவிட்டு போகலாம் என்று!

வந்து பாத்தால் ஊர் முழுவதும் பச்சை கலர்!

இவர் அரண்மனைக்கு போனதுமே இரண்டு பேர்கையிலே பெயிண்ட் வாளியோடு ஓடிவந்தார்கள். "முனிவரே! கொஞ்சம் நில்லுங்கள். உங்கள் உடம்பு முழுவதும் பச்சை பெயிண்ட் அடித்து விட்டுவிடுகிறோம். அதன்பின்தான் நீங்கள் உள்ளே போகலாம்!" என்றார்கள்.

முனிவர் திகைத்துப் போய்விட்டார். "என்னடா இது..? நம் யோசனை இந்த அளவுக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டதே!" என்று.

அதன்பின் அந்த பெயிண்ட் ஆசாமிகளைப் பார்த்து "கொஞ்சம் பொறுங்கள்!" என்று சொல்லிவிட்டு ராஜாவைப் போய்ப் பார்த்தார்.

"அரசனே! உனக்கு யார் இந்த வர்ணம் பூசும் யோசனையைச் சொன்னது? பச்சை நிறத்தைப் பாருங்கள் என்று சொன்னால் அதற்காக இப்படியா அரசாங்கப் பணத்தை வீணடிப்பது? உன்னுடைய பார்வையை மாற்றிக்கொண்டால் போதாதா?" என்றார். அது எப்படி பார்வையை மாற்றுவது?" என்றான் அரசன். "ஒரு பச்சை நிற கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார் முழுவதும் பச்சையாக தெரியும்... அதற்குப்போய் இவ்வளவு பணம் விரயம் செய்திருக்கிறாயே?" என்றார் முனிவர். எதற்கு இந்த கதை என்றால்...

இந்த உலகத்தைப் பார்க்கின்ற நம் பார்வையை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.இந்த உலகம் முழுவதுமே நம் உள்ளுணர்வுகளின் வெளிப்பாடுதான் என்கின்ற உண்மையை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் புரிந்து கொண்டால் "எல்லாமே மோசம்" என்று அலுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது! இல்லை என்றால் ஒருத்தருக்கொருத்தர் மோதிக்கொண்டிருக்க வேண்டியது தான்.

என்னிடம் வழக்கமாக வந்துகொண்டிருக்கின்ற ஒருத்தர்..

"சார் எனக்கு கடுமையான தலைவலி கண்ணாடியை மாத்தலாமா?" என்று கேட்டார். "அவசியம் மாற்ற வேண்டும் என்றேன் நான். "எதனாலே அப்படி சொல்றீங்கள்?" என்று கேட்டார். "இப்ப நீங்கள் போட்டுக்கொண்டிருப்பது என்னோட கண்ணாடி சார்! நேற்று இங்கே வந்த போது கை தவறுதலா அந்த கண்ணாடியை போட்டு வீட்டீர்கள்!" என்றேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச காணிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு



(தருமபுரம்)

ஹிமி கம எனும் தேசிய திட்டத்தின் வளமான நாடு அழகிய வாழ்வு எனும் தொனிப்பொருளில் இலவச காணிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் நேற்று காலை 9 மணியளவில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கமத் தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால் காந்த, காணி நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், அரசாங்க அதிபர், வடக்கு மாகாண ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் இலவச காணிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் பல காலமாக காணிக்கான பத்திரங்கள் இல்லாமல் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் காணி உரிமையாளர்கள் 332 பேருக்கு காணிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (8-104-316)

# இராணுவத்திடம் உள்ள காணிகளை விடுவித்து தாருங்கள்

## காணி உரிமையாளர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் இராணுவத்தினரால் அடாத்தாகபிடிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவித்து, அக்காணிகளில் மக்கள் சுதந்திரமாக விவசாயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் வலி வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காணிகளின் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், யுத்தம் முடிந்து 16 வருட காலமாக பாதுகாப்பு காரணங்களுக்காக என கூறி தனியார் காணிகளை கையகப்படுத்தி வைத்துள்ள இராணுவத்தினர் அதில் விவசாயம் செய்கின்றனர். காணி உரிமையாளர்கள் விவசாயம் செய்யமுடியாது வறுமையில் வாடுகின்றனர்.தனியார் காணிகளை அடாத்தாக பிடித்து விவசாயம் செய்வது சட்டவிரோதமானது.

அது மாத்திரமின்றி மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் இராணுவத்தினர், எவ்வாறு விவசாயம், பண்ணை, வியாபாரங்கள் நடத்தி வருமானத்தை பெற முடியும்? அவ்வாறு பெறப்படும் பணம் எங்கே செல்கின்றது? அந்த பணம் திறைசேரிக்கு அனுப்பப்படுகிறதா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

எனவே யுத்தம் முடிந்து 16 வருட காலமாக பாதுகாப்பு காரணம் என கூறி தனியார் காணிகளை அடாத்தாக பிடித்து விவசாயம் செய்து வருமானத்தை ஈட்டி வருவதானால் காணி உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடுகளை வழங்க வேண்டும்.

அதேவேளை எமது காணிகளை உடனடியாக விடுவித்து, நாம் விவசாயம் செய்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, நடந்து செல்லவோ, துவிச்சக்கர வண்டியில் செல்லவோ முடியாத நிலையில் இரவு 7 மணி முதல் காலை 6 மணி வரையில் போக்குவரத்துக்கு தடை போன்ற கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்டுள்ள பலாலி வீதியால் மக்கள் சுதந்திரமாக போக்குவரத்து செய்வதற்கு கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-33)



கலாசார சித் ரூ- 2025 நிகழ்வில் குழு நடனத்தில் கிளிநொச்சி மாவட்டம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினை பெற்றுச் சாதனை படைத்தது.
அந்தவகையில் சாதனையாளர்களையும் சாதனைக்கு முன்னின்று உழைத்த ஆசிரியர் மற்றும் ஒப்பனைக்கலைஞர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச்செயலக மாநாட்டுமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

# விசுவமடு அரிசி ஆலைக்கு வர்த்தக அமைச்சர் விஜயம்!



(தருமபுரம்)

முல்லைத்தீவு வள்ளுவர் புரம் பகுதியில் உள்ள விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் நவீன அரிசி ஆலையை வர்த்தகம் வாணிபம் மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார்.

அமைச்சருடன் கூட்டுறவு பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க ,பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.குறித்த அரிசி ஆலையின் தேவைகள் தொடர்பாக அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மாவட்டத்தின் கூட்டுறவுத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மகஜரையும் கையளித்திருந்தனர். (8-316)

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் மாதாந்த அமர்வு

(தருமபுரம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் உப தவிசாளர் சிவகுரு செல்வராசா தலைமையில் இடம் பெற்றது. இவ் அமர்வில் சபையால் வழங்கப்படும் விசேட அனுமதி மற்றும் அனுமதி தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அனுமதிகளும் வழங்கப்பட்டன.

மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்கு உட்பட்ட பயன்படுத்தப்படாத நிலங்களுக்கு 2 வீத வரி அறவிடுவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் அதனை மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் அறிவித்து உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் பளை பொதுச் சந்தையில் காணப்படும் இடிபாட்டு கற்களை தேவையின் நிமித்தம் காணப்படும் வீதிகள் மற்றும் இடங்களை நேரடியாக சென்று பார்வையிட்டு அவ்விடங்களுக்கு வழங்குவது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் வீதி விளக்குகள் திருத்தம் மற்றும் புதிதாக அமைப்பது தொடர்பான கூலி தொடர்பாக வாத பிரதிவாதம் இடம்பெற்றதுடன் இறுதியில் திருத்த வேலைக்கு 1000 ரூபா மற்றும் புதிதாக அமைப்பதற்கு 1050 ரூபா எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த பிரதேச சபை அமர்வில் 13 உறுப்பினர்களில் 11 உறுப்பினர்கள் மாத்திரமே கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-316)

# புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கைக்குண்டு அடையாளம்!



(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் வடக்குப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த காணியை நேற்று முன்தினம் துப்புரவு செய்த வேளை கைக்குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது. இது குறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸார் குறித்த விடயத்தை மல்லாகம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் குறித்த குண்டினை மீட்டு செயலிழக்க விசேட அதிரடிப் படையினருக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. (8-104)

# மன்னார் மடுத்திருத்தலத்தின் திருவிழாவிற்கான கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலிக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் மடு திருத்தலத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

மன்னார் - மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் இடம்பெற்று வரும் நிலையில் நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட திருவிழாவாக இடம் பெறவுள்ளது.

இந்நிலையில், மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த கலந்துரையாடலானது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் மடு திருத்தல மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

வருடா வருடம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழமை.

மேலும், வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் மற்றும் உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டது.

அதேவேளை, சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது அத்துடன் மன்னார் மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழாவை முன்னிட்டு யாழின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் பாதயாத்திரையாக மடுத்திருப்பதியை சென்றடைந்துள்ளனர். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 844



பூங்குழலி கண்களில் தீப்பொறி பறக்க அவனை ஒரு தடவை விழித்துப் பார்த்துவிட்டு அமுதனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சாலையோடு மேலே சென்றாள். கொஞ்சத் தூரம் போனதும், "அமுதா! நீ கத்தி எடுத்துப் போர் செய்யக் கற்றுக் கொண்டதும் முதலில் இந்தத் தூர்த்தனாகிய வைத்தியர் மகனின் உயிரை வாங்க வேண்டும். உன் கத்திக்கு முதலாவது பலி இவன்தான்" என்றாள்.

இரவும் பகலும் வழி நடந்து பூங்குழலியும் சேந்தன் அமுதனும் தஞ்சாவூரை நோக்கிச் சென்றார்கள். ஏழெட்டுக் குதிரை வீரர்கள் ஒரு பெண்மணியை அழைத்துச் சென்றதைக் குறித்து வழியில் விசாரித்துக் கொண்டு போனார்கள். பாதி வழி வரையில் கொஞ்சம் தகவல் கிடைத்தது, அப்புறம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் தஞ்சாவூர் வரையிலும் போய்த் தேடிப் பார்த்து விடுவது என்று போனார்கள்.

சேந்தன் அமுதனுக்கு இந்தப் பிரயாணம் வெகு உற்சாகமாயிருந்தது. பூங்குழலியுடன் பேசிக் கொண்டு சென்றது உற்சாகத்துக்கு ஒரு காரணம். கத்திப் பயிற்சி பெற்றுக் கொண்டே போனது மற்றொரு காரணம். கோடிக்கரைக்கு அருகிலேயே பூங்குழலிக்குத் தெரிந்த ஒரு கொல்லுப் பட்டறையில் அவன் ஒரு கத்தி வாங்கிக் கொண்டிருந்தான். போகும் போதெல்லாம் அதைச் சுழற்றிக் கொண்டே போனான். சில சமயம் எதிரில் பகைவன் வருவதாகவும் அவனுடன் சண்டை போடுவதாகவும் எண்ணிக் கொண்டு கத்தியைத் தாறுமாறாக வீசினான். அவ்வப்போது பூங்குழலி அவனுக்குக் கத்தியை இப்படிப் பிடித்துக்கொள்ள வேண்டும். இப்படிச் சுழற்ற வேண்டும் என்று கற்பித்துக் கொடுத்துக் கொண்டு வந்தாள். இதனால் இரண்டு பேருக்குமே பிரயாணம் உற்சாகமாயிருந்தது.

தஞ்சாவூர்க் கோட்டை கண்ணெதிரே தென்பட்ட போது தான் வந்த காரியத்தை எப்படிச் சாதிப்பது என்ற கவலை பூங்குழலிக்கு ஏற்பட்டது. அவளுடைய கவலையைச் சேந்தன் அமுதனும் சேர்ந்து பகிர்ந்து கொண்டான். கோட்டைக்குள் பிரவேசிப்பதே பிரம்மப் பிரயத்தனமான காரியமாயிற்றே? பூங்குழலி எண்ணியுள்ள காரியங்களை எல்லாம் எப்படி நிறைவேற்றுவது? வந்தியத்தேவனுடைய அகடவிகட சாமர்த்தியங்களெல்லாம் சேந்தன் அமுதனுக்கு நினைவு வந்தன. அவனுடைய சாமர்த்தியங்களில் பத்தில் ஒரு பங்கு தனக்கு இருக்கக்கூடாதா? அல்லது அந்த வந்தியத்தேவனே இந்தச் சமயம் இங்கே வரக் கூடாதா!.

வந்தியத்தேவனாயிருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி நடந்து கொள்வான் என்று சேந்தன் அமுதன் சிந்திக்கத் தொடங்கினான். அச்சமயத்தில் சாலையில் மூடுபல்லக்கு ஒன்று வந்தது. சூரியன் மேற்குத் திசையில் மறைந்து இருள் சூழ்ந்து வந்த நேரம். மூடுபல்லக்கின் மேல் திரையில் பனைமரச் சித்திரங்கள் காணப்பட்டன.

'ஆகா! பழுவூர் இளைய ராணியின் பல்லக்குப் போலல்லவா காண்கிறது? கோட்டைக்கு வெளியிலேயே பழுவூர் ராணியைச் சந்தித்து முத்திரை மோதிர இலச்சினையைப் பெற முடியுமானால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்?' என்று அமுதன் எண்ணினான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குடியானவனின் யோசனை



முன்னொரு காலத்தில் ஒரு சிறு வயது குடியானவன் வாழ்ந்து வந்தான். அவன் கொஞ்சம் புத்திசாலி.

அவன் வீட்டில் ஒரு பசு மாட்டை வளர்த்து வந்தான். அந்த பசு மாட்டில் பால் கறந்து வீடு வீடாய் சென்று பால் ஊற்றி தானியங்களை அதற்கு ஈடாக பெற்றுக் கொள்வான்.

சேகரித்த தானியங்களை கொண்டு போய் நகை கடைகளில் கொடுத்து நகைகளாக பெற்றுக்கொள்வான். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக நகைகளை சேகரித்து ஒரு மண் சட்டிக்குள் வைத்து ஒரு இடத்தில் புதைத்து வைத்து விடுவான். புதைத்து வைத்த இடத்தை அடையாளம் வைத்துக்கொள்ள செடி கொடிகளை நட்டு பெரிய காய்கறிகள் தோட்டம் போட்டு வைத்தான்.

அவன் சிறு வயது முதல் பால் ஊற்றி சம்பாதித்து பத்து வருடங்கள் கழித்து, அவனுக்கு திருமணம் செய்து கொள்ள ஆசை வந்தது. அப்பொழுதெல்லாம் திருமணத்துக்கு பெண் வேண்டுமென்றால் பெண்ணின் பெற்றோர்களுக்கு நிறைய நகைகள் கொடுக்க வேண்டும். அவர்களும் பதிலுக்கு மாப்பிள்ளை என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறாரோ அதற்கு உதவி செய்வார்கள். இவனுக்கு, பெண்ணை பெற்றவர் கள் ஒரு பசு மாடு தருவதாக வாக்குறுதி கொடுத்தார்கள், பெண்ணை பெற்றவர்கள் நாலு மைல் தள்ளி இருக்கிறார்கள்.

இவ னும் பெண் வீட்டாரின் ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொண்டு இவன் வீட்டுக்கு பெண் வீட்டாரை வரச் சொல்லி விட்டான்.

அவர்களும் வண்டி கட்டிக் கொண்டு அவன் வீட்டிற்கு வந்து விட்டனர். அவர்களுடன் ஒரு களவாணியும் எப்படியோ உறவு முறை சொல்லி அவர்களுடன் இவன் வீட்டிற்கு வந்து விட்டான்.

நல்ல வெயிலில் வந்து இறங்கிய எல்லோரையும் வரவேற்று அனைவருக்கும் தாகம் தீர மோர் கொடுத்தான். அதன் பின் அனைவரையும் கூட்டிச் சென்று இவன் தோட்டத்தை சுற்றி காண்பித்தான்.

அவர்களுக்கு இவன் தோட்டம் பிடித்து போய் விட்டது. காய்கறிகள் நன்கு காய்த்து இருந்தது. அந்த காய்கறிகளை பறித்து வந்து சமையல் செய்து பெண் வீட்டாருக்கு விருந்து வைத்தான்.

நன்கு சாப்பிட்ட பின் ஓய்வு எடுத்த பெண் வீட்டார், அதன் பின் மாப்பிள்ளை சீதனம் வழங்க பெண் வீட்டாரின் முக்கியமான ஒருவரை மட்டும் அழைத்துக்கொண்டு தோட்டத்துக்கு சென்றான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைச் செய்தாலும் தெளிவு, அறிவு மற்றும் அன்போடு செய்ய வேண்டும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழியல் மாநாடு எழுச்சி தரட்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை முன்னெடுக்கும் ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு நாளை 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் இடம்பெறும் மாநாடு எழுச்சியை ஏற்படுத்துவதாக.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சைவப் பெருவள்ளல் சேர்.பொன் இராமநாதன் பிரபுவின் ஈகையால் எமக்குக் கிடைத்த பெரும் சொத்து. எனினும் அதைக்கூட மறந்து போகின்ற அளவில் நாம் இருப்பதுதான் வேதனைக்குரியது.

உண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் புகழ் இன்னமும் உயிர்ப்புடன் உளதெனில், அதற்குக் காரணம் யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் என்று அறுதியிடலாம்.

அதிலும் இன்னும் நுணுகிக் கூறுவதாயின், தமிழ்த்துறை கொண்டிருந்த புலமையும் சான்றாண்மையும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் கொண்டிருந்த ஈடுபாடும் யாழ்.பல்கலைக்கழகத்தின் பெருமையை உலகளவில் பறைசாற்றியது.

இதையும் கடந்து இந்து நாகரிகம், புவியியல், வரலாறு, பொருளியல் உள்ளிட்ட சகல துறைகளும் சேர்ந்து யாழ்.பல்கலைக்கழகம் என்றால் அது கலைப்பீடம் என்ற புலக்காட்சியை ஏற்படுத்தியிருந்தது.

அதற்குக் காரணம் அந்தத்துறை சார்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் சமூகப் பங்களிப்பு எனக் கூறுவது சாலப் பொருத்துடையது.

இதைக்கூறுவதற்காக ஏனைய பீடங்கள் தங்களைக் குறைத்து மதிப்பிடுவதாகத் தயவு செய்து நினைத்துவிடலாகாது.

நாம் இங்கு கூறுவது; யாழ்.பல்கலைக்கழகம் என்றால் அது கலைப்பீடம். அதிலும் தமிழ்த்துறை என்பதை மீள நினைவுபடுத்துவதாகும்.

எனினும் சமகால நிலைமை மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது. ஆம், யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மற்றும் இந்து நாகரிகத்துறை ஆகியவற்றில் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக வீழ்ச்சி கண்டுள்ளது.

எனவே நாளை 15ஆம் திகதி நடைபெறுகின்ற சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு தமிழ் சார்ந்து எழுச்சியை ஏற்படுத்த வேண்டும்.

அதிலும் குறிப்பாக, தமிழைப் பட்டப்படிப்பாக மேற்கொள்ள வேண்டும் என்ற உத்வேகத்தை – விருப்பை – உணர்வெழுச்சியை மேற்படி மாநாடு மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். அதை ஏற்படுத்தும் போது தான் யாழ்.பல்கலைக்கழகத்தின் பெருமையும் புகழும் சால்பும் என்றும் நிலைபெறும்.

ஆகையால் தமிழ்த்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்களை அதிகரித்தல், தமிழ்த்துறையும் இந்துக் கற்கைகள் பீடமும் என்றென்றும் சேர் பொன். இராமநாதன் பிரபுவின் பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் இயங்குதல் என்பவற்றை சத்தியப்பிரமாணமாக மாநாட்டில் எடுத்துக் கொள்ள வேண்டும். இது இன்றைய காலத்தின் கட்டாயம்.

# இலங்கைத் தொழிற்துறையை மேம்படுத்த புதிய சட்டம்

## அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி

(கொழும்பு)

இலங்கைத் தொழிற்துறையை மேம்படுத்துவதற்காக பொருள் குவிப்பு எதிர்ப்பு மற்றும் எதிர்வரிகள் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உற்பத்திச் செலவுக்கும் குறைந்த எவ்வித தரமும் அற்ற பொருட்கள் இலங்கையில் அதிகமாகக் கிடைக்கிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிக்கும் குறைவான விலையில் லைட்டர் விற்கப்படுகிறது.

எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. அதன் தரம் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் இல்லை. இலங்கையில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் செலுத்தும் வரியின் பெறுமதி கூட இல்லை.

அதனால் இப்போது தேசிய உற்பத்தியாளர் இவ்வாறான பொருள் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யலாம். தடையும் செய்யலாம்.

இவ்வாறான சட்டங்கள் இப்போது மக்களுக்கு தென்படுவதில்லை. காலம் செல்ல செல்லத்தான் அதன் பயன் உணரப்படும் என்றார். (ம-7)

## புத்தளத்தில் பேருந்து மோதியதில் ஒருவர் மரணம்

புத்தளத்தில் அதிசொகுசுப் பேருந்து மோதியதில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் 54 வயதுடைய நொச்சியாகம, மொரவக கந்தப் பகுதியைச் சேர்ந்தவரே உயிரிழந்தவராவார்.

புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியில் புத்தளத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த அதிசொகுசு பேருந்து ஒன்று, சைக்கிளைத் தள்ளிக்கொண்டு பாதையைக் கடக்க முற்பட்டவர் மீது மோதியுள்ளது.

இதில் பலத்த காயமடைந்த மேற்படி நபர் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார். (ம-7)

## மீள ஆரம்பிக்கப்படவுள்ள மீனவர் ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

கைவிடப்பட்டிருந்த மீனவர் ஓய்வூதியத் திட்டம் அடுத்த மாதத்தின் முதல் வாரத்திற்குள் மீள ஆரம்பிக்கப்படுமெனக் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை விவசாய அமைச்சு மற்றும் கடற்தொழில் அமைச்சு ஆகியன இணைந்து மீள ஆரம்பித்துள்ளதாகவும் அச்சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை தகுதியானவர்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்க ஆராச்சி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சந்நிதி ஆலயத்திற்கு வழிபடச் சென்ற பெண்ணே

### தொண்டைமானாற்றில் சடலமாக மீட்கப்பட்டார்

செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வழிபடச் சென்ற பெண்ணே மாலை ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள தொண்டமனாற்றுக் கடல் நீரேரியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்

அச்சுவேலி தோப்புப் பகுதியைச் சேர்ந்த இராஜலிங்கம் சுபாஷினி (வயது - 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் காலை வீட்டில் இருந்து ஆலயத்திற்குச் செல்வதாகக் கூறிச் சென்ற நிலையில் இரவாகியும் வீடு திரும்பாத நிலையில் பெண்ணின் பெற்றோர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தனர்.

அதன் போதே மாலை தொண்டமனாற்றுக் கடல் நீரேரியில் இருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறி புகைப்படங்களை பெற்றோரிடம் காட்டியுள்ளனர்.

அதனையடுத்து பெற்றோர் சடலமாக மீட்கப்பட்ட பெண் தமது மகளே என அடையாளம் காட்டியுள்ளனர்.

அதேவேளை சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் கூற முடியும் என தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## முன்னாள் கடற்படைத் தளபதியின் விளக்க மறியல் நீடிப்பு

முன்னாள் கடற்படைத் தளபதி நிசாந்த உலுகேவை எதிர்வரும் 26ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பொல்கஹாவெல நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னாள் கடற்படைத் தளபதி நிசாந்த நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன் போது நிசாந்தவை 27ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிசாந்த, கடற்படை புலனாய்வுப் பிரிவு பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் இடம்பெற்ற கடத்தல் சம்பவமொன்று தொடர்பில் கடந்த ஜூலை மாதம் 28ம் திகதி கைது செய்யப்பட்டார். (ம-7)

## கம்பஹா மினுவாங்கொடவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

கம்பஹா மாவட்டம் மினுவாங்கொட, பத்தடுவனப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இந்தத் துப்பாக்கி பிரயோகத்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மினுவாங்கொடப் பகுதியில் 'பஸ் திலீப' என்ற நபரை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் இருப்பினும் குறித்த துப்பாக்கிச் சூட்டில் எந்தவொரு நபருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 37

சொக்கன்

சிலமணி நேரங்களில் ஐநூற்றுச் சொச்ச ட்ரம்களும் அந்த இன்னொரு கப்பலுக்கு மாற்றப்பட்டுவிட்டன. வந்தது போலவே மௌனமாக இருட்டில் ஊர்ந்து சென்று மறைந்தன அந்தக் கப்பல்கள்.

மறுநாள் இருநூறு தொன் மஞ்சள் கேக் இஸ்ரேல் எல்லைக்குள் வந்து இறங்கியது. இந்தச் சரக்கு மொத்தமும் பரம ரகசியமாக இஸ்ரேலின் அணு ஆராய்ச்சி நிலையமான டிமோனோவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்தச் சாகசத்தை இஸ்ரேல் அரசாங்கத்தால் கூட நம்பமுடியவில்லை. அவர்கள் கேட்டபடி மூன்றாம் நபருக்குத் தெரியாமல் இருநூறு தொன் மஞ்சள் கேக்கை ஜஸ்ட் லைக் தட் அள்ளிக் கொண்டு வந்துவிட்டது மொசாட்!

வேடிக்கை என்னவென்றால் இப்படி தொன் கணக்கில் மஞ்சள் கேக் நடுக்கடலில் காணாமல்போன விடயமே பல மாதங்களுக்கு யாருக்கும் தெரியவில்லை.

கடைசியாக ஐரோப்பிய அணு ஆராய்ச்சிக் கட்டுப்பாட்டு அமைப்பு இந்தக் கடத்தலை மோப்பம் பிடித்தபோது கூட அதில் இஸ்ரேல் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதுதான் மொசாட். நல்ல காரியமோ கெட்ட காரியமோ எதுவானாலும் ஒரு சின்னத் தடயம் கூட மிச்சமில்லாமல் முடித்து வைப்பதில் அவர்கள் சமர்த்தர்கள்.

ஆனானப்பட்ட அமெரிக்காவே இந்த விடயத்தில் மொசாட்டைப் பார்த்து மூக்கில் விரல் வைத்தது உண்மை. ஒட்டு மொத்த ஐரோப்பாவும் இந்தப் பொடிப் பயல்களிடம் இப்படி ஏமாந்துவிட்டோம் என்று வெட்கப்பட்டுத் தலை குனிந்ததும் உண்மை!



இந்த நடுக்கடல் கொள்ளை தவிர வேறு சில வழிகளிலும் இஸ்ரேலுக்குத் தேவையான மஞ்சள் கேக்கைத் திரட்டிக் கொடுத்தது மொசாட். அவர்களுடைய உதவியுடன் இஸ்ரேலின் அணு ஆராய்ச்சிகள் அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தன.

அதேநேரம் மீண்டும் இஸ்ரேல் அரசாங்கம் மொசாட்டை அழைத்தது இன்னொரு முக்கியமான கடத்தல் வேலையை அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

மிஸ்டர் மொசாட் ஃப்ரெஞ்சுத் துறைமுகம் செர்பார்க்கில் நமது போர்ப் பட்குகள் ஐந்து நின்று கொண்டிருக்கிறது. அதையெல்லாம் கொஞ்சம் தேட்டை போட்டுக் கொண்டு வர முடியுமா?

ஆனால் ஃப்ரான்ஸ் நாட்டுத் துறைமுகத்தில் ஏன் இஸ்ரேலியப் படகுகள் நிற்கவேண்டும்? அப்படியே நின்றாலும் கூட அதை ஏன் மொசாட் கடத்த வேண்டும்? இது எங்களது ஊர்ப்படகு என்று உண்மையைச் சொல்லி உரிமையோடு ஓட்டிக் கொண்டு வர முடியாதா?

செம சிக்கலான மேட்டர் இது. கொஞ்சம் இடியாப்பத்தைப் பிரித்து விளக்கினால்தான் புரியும்.

அப்போது இஸ்ரேலுக்கும் ஃப்ரான்ஸுக்கும் இடையே சில அரசியல் பிரச்சினைகள். இனிமேல் இஸ்ரேலுக்கு எந்த ஆயுதமும் விற்க மாட்டோம் என்று தடை விதித்து விட்டது ஃபிரான்ஸ் அரசாங்கம்.

ஆனால் இந்தத் தடை விதிக்கப்படுவதற்கு முன்பாகவே ஃப்ரான்ஸ் நிறுவனம் ஒன்றில் பன்னிரண்டு போர்ப் படகுகளுக்கு ஓர்டர் கொடுத்திருந்தது இஸ்ரேல். அதில் ஏழு படகுகள் ஏற்கெனவே டெலிவரி ஆகிவிட்டன. ஐந்துமட்டும் பாக்கி.

இப்போது மேட்டர் புரிந்திருக்கும் இஸ்ரேலுக்குச் சொந்தமான படகுகள் ஃப்ரான்ஸில் எக்குத்தப்பாக மாட்டிக்கொண்டிருக்கின்றன. தடையை மீறி அவற்றைக் கடத்திக் கொண்டுவரவேண்டும். இப்பேர்ப்பட்ட புண்ணிய காரியத்தைச் செய்வதற்கு மொசாட்டை விட்டால் வேறு யார்?

## நழுவுப் படை

நாலணாவா எட்டணாவா முழுசாப் பத்து மில்லியன் டொலர் யார் அப்பன் வீட்டுக் காசு? ஃபெலிக்ஸ் அமியாட் எரிச்சலின் உச்சத்தில் இருந்தார்.

ஐயா பிரெஞ்சுக் கனவான்களே நீங்கள் இஸ்ரேலைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுங்கள் இல்லாவிட்டால் இரண்டு பேரும் சட்டையைக் கிழித்துக் கொண்டு நடுத்தெருவில் உருளுங்கள் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. உங்களுடைய கொஞ்சல் குலாவல் பங்காளிச் சண்டக்கு நடுவே என் பிழைப்பை ஏன் கெடுக்கிறீர்கள்?

ஃபெலிக்ஸின் எரிச்சலுக்குக் காரணம் அப்போதுதான் அவருடைய CMN (Constructions Meciniques de Normandie) நிறுவனம் இஸ்ரேலுக்குச் சேரவேண்டிய 12 போர்ப் படகுகளைத் தயார் செய்து முடித்திருந்தது. ஒரு படகின் விலை இரண்டு மில்லியன் டொலர்கள்!

இந்தப் பன்னிரண்டு படகுகளில் ஏழு மட்டும் ஏற்கெனவே இஸ்ரேலுக்கு டெலிவரி செய்யப்பட்டு விட்டது. மிச்சமுள்ள ஐந்தையும் அனுப்பி வைத்துக் காசை எண்ணலாம் என்று பார்த்தால் இஸ்ரேலுக்குக் காக்கா குருவியைக் கூட அனுப்பக் கூடாது என்று தடை போட்டு விட்டது பிரான்ஸ்.

பதறிப்போன ஃபெலிக்ஸ் அமியாட் அவசரமாக ஃபிரெஞ்சு அரசாங்கத்தைத் தொடர்புகொண்டார் இஸ்ரேலுக்குச் சேர வேண்டிய ஐந்து போர்ப் படகுகளை நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது இதையெல்லாம் என்ன செய்வது?

ஒன்றும் செய்ய வேண்டாம் பிரான்ஸ் அதிகாரிகள் கூலாகச் சொன்னார்கள் செர்பார்க் துறைமுகத்தில நிறைய இடம் இருக்கு எல்லாவற்றையும் ஒரு மூலையில் கட்டி வையுங்கள் பின்பு பார்த்துக் கொள்ளலாம்.

ஃபெலிக்ஸ் அமியாடுக்கு அதிர்ச்சி பின்னே? பத்து மில்லியன் டொலர் மதிப்புள்ள போர்ப் படகுகளைச் சும்மா நிறுத்தி வைக்கமுடியுமா? இதனால் ஏற்படுகிற நஷ்டத்துக்கு யார் பொறுப்பு? அப்படியே தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டார் அவர்.

அப்போதுதான் அவருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்கக்கூடாது என்று தடை போட்டது ஃபிரெஞ்சு அரசாங்கம்தானே. பேசாமல் இந்த ஐந்து போர்ப் படகுகளையும் அவர்கள்தலையிலேயேகட்டி விட்டால் என்ன?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும்போது, அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட பகுதிகளுக்கு மேலதிகமாக புதைகுழிகள் காணப்படுகின்றனவா என பதைக் கண்டறியும் நோக்குடன் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட ஸ்கான் நடவடிக்கையின் அறிக்கை, மண் பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட சில முக்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த 07ஆம் திகதியுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 07ஆம் திகதி வரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது, 133 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 147 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தது.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் பகுதி அகழ்வு நடவடிக்கைகள் எதிர்வரும் 21ஆம் திகதியளவில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையில், இன்று வியாழக்கிழமை நடைபெறும் வழக்கு விசாரணைகளின்போது உத்தியோகபூர்வமாக திகதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7,33)

## மன்னார்...

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடை பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் சாதக, பாதக நிலைமைகளை மீளாய்வு செய்யும் நோக்கில் ஒரு மாதத்துக்கு தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## செம்மணியில்...

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழியில் சிலர் உயிருடன் புதைக்கப்பட்டிருக்கலாம் என கருதுகின்றோம்.

ஏற்கெனவே இறந்தநிலையில் அவர்கள் புதைக்கப்பட்டிருந்தால் அவர்களின் உடலங்கள் வளையாது. சிலரின் கைகால்கள் வளைக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது.

அரசாங்கங்களை நம்பமுடியாது என்பதை வரலாறு எங்களிற்கு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு இனப்பிரச்சினை குறித்த புரிதல் இல்லை அவர்கள் அதனைப் புரிந்துகொள்ளவில்லை. ஊழலை ஒழித்தால் நாடு அமைதியாக இருக்கும் என அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் நாடு கடனிற்குள் சிக்கியமைக்கு இனப்பிரச்சினையும் ஒரு காரணம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை எனத் தெரிவித்தார். (ம-7)

## செம்மணிப்...

வசித்து வரும் யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 32 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 300 பேருக்கும் நேற்றுப் புதன்கிழமை (13) காணி உரிமைப் பத்திரம் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி, பளை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்,

காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை வடக்கில் இருந்தே ஆரம்பித்துள்ளோம். வடக்கு மக்களின் வாழ்வில் என்றைக்கு வசந்தம் துளிர் விடுகின்றதோ அன்றுதான் எமது வாழ்விலும் வசந்தம் ஏற்படும். ஏனெனில், இது மக்களுக்கான அரசாங்கமாகும்.

சுமந்திரனுக்கு ரணிலுடன் இருக்கும்போது நல்லது. யாழ். நூலகத்தை எரித்த பாவிகளின் பைல்களை தூக்கிக்கொண்டு திரியும்போது தமிழ் மக்களின் பிரச்சினை அவருக்கு தெரியவரவில்லை. ஆனால் இன்று அவர் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

மட்டக்களப்பில் 10, 15 பேரை அழைத்து சாணக்கியன் இன்று ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார். அவர் நாமல் ராஜபக்ஷவின் நீலப்படையணியில் இருந்தவர் ஆவார்.

கடந்தகால கொலைகள் தொடர்பில் கண்டறியப்பட வேண்டும். அதனால்தான் செம்மணி புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணி மற்றும் விசாரணைக்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என்றார். (ம-7)

## முத்தையன்...

மட்டக்களப்பு மாவட்ட அபி விருத்திக் குழுக் கூட்டம் நேற்று புதன் கிழமை (13) பழைய கச்சேரி மண்டபத்தில் அபிவிருத்திக் குழுத் தலைவர் அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட பின்னர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமில் இளைஞர்களில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஊடகவியலாளர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் அவர்கள் அனுமதியின்றி உள்ளே நுழைந்தனர்.

இருந்தபோதும் அந்த முகாமிற்குள் உள்நுழைந்த சம்பவம் தொடர்பாக 3 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. அங்கு இரும்பு திருடப்பட்டதாக தெரியவந்துள்ளதுடன் இது தொடர்பில் இராணுவத்தினர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் இந்த இரும்புக் கடத்தலில் 3 இராணுவத்தினர் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் நிமித்தம் 3 இராணுவத்தினரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

அதேவேளை நீதியாக விசாரணை இடம்பெற்று வருகின்றது. இதனை மக்களுக்கு நாங்கள் சொல்லுகின்றோம். எனவே தவறு செய்தால் யாரென்றாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்துவது எமது பொறுப்பாகும் என்றார். (ம-7)

## ஆறாவது சர்வ...

எனும் கருப்பொருளில் இடம்பெறும் இவ் ஆய்வு மாநாட்டில் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி துரை மனோகரன், பேராசிரியர் ம.இரகுநாதன், திருவாளர் ச.விநாயகமூர்த்தி, மூத்த படைப்பாளர் க.சட்டநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.08.13
சீட்டிழுப்பு இலக்கம் 5920
J 7 3 4 4 6 9
அத சம்பத
J 4 4 6 9
சீட்டிழுப்பு இலக்கம் 495

சுப தவசக்
திகதி 2025.08.13
சீட்டிழுப்பு இலக்கம் 0036
சிம்மம் 03 20 35 41

தன நிதானய
திகதி - 2025.08.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1950
I 07 09 15 80 I
டபிள் சான்ஸ் 29175

மெகா பவர்
திகதி 13/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2268
P 10 15 17 58 59

ஜய
திகதி 2025.08.13
சீட்டிழுப்பு இலக்கம் 0188
L 0 0 2 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4162
சீட்டிழுப்பு திகதி 13.08.2025
H 05 25 49 58
H

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.13
சீட்டிழுப்பு இலக்கம் 1229
கன்னி 10 12 13 15 கன்னி
94728

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல்
13.08.2025 வெற்றி வாரம் 0628
M 0 9 4 3 1 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,906,843.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2894
சீட்டிழுப்பு திகதி 2025.08.13 தினம் புதன்கிழமை
43 47 55 76 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,631,402.40

சனிதா
திகதி 13.08.2025 வெற்றி வாரம் 5055
24 25 30 79 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,075,225.20

ஜயோதா Jayoda
திகதி 2025.08.13 வெற்றி வாரம் 2152
11 13 33 57 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,032,144.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4606
சீட்டிழுப்பு திகதி 13.08.2025 தினம் புதன்கிழமை
03 12 20 54 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,595,919.60

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 24 03 07 18 63
2070
13.08.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.587,638,633.40

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2720
சீட்டிழுப்பு திகதி: 2025.08.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,612,905.60
23 27 74 76 G

DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3646) 076 825 7716 (ஆகாஸ்)

## மாப்பிள்ளை தேவை

01. யாழ், இந்து, 1978, பரணி, O/L, Cashier, UK - Citizen, Divorce, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53727
02. சாவகச்சேரி, இந்து, 1986, கார்த்திகை, Diploma in Management, Australia, விதவைப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 26673
03. சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Graduate, Software Engineer, Singapore - Citizen, divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54241
04. வேலணை, இந்து, 1983, விசாகம், MBBS Doctor, UK Citizen, divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53687
05. வேலணை, இந்து, 1983, விசாகம், MBBS Doctor, UK Citizen, divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 26664
06. உரும்பிராய், இந்து, 1985, புனர்பூசம், BTECH Machanical, Engineering, South Africa - Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 14110
07. பருத்தித்துறை, இந்து, 1994, விசாகம், A/L, Associate Broker, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54171
08. கந்தர்மடம், இந்து, 1988, ரோகிணி, BSC Bio Medical, ACCA, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54136
09. கைதடி, இந்து, 1998, விசாகம், Bachelor Of Law, BA, New Zeland Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53788
10. கந்தரோடை, இந்து, 1986, பூரட்டாதி, MBBS Doctor, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 33397

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (5037)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

# வரலாற்று ...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்கின் அண்மைய இலங்கை விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமை குறித்து விரிவான அறிக்கையில் இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அந்த அறிக்கையில் இலங்கைக்கான சில பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய அரச படைகள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் செய்யப்பட்ட துஷ்பிரயோகங்களை அந்தத் தரப்புக்கள் முறையாக ஒப்புக் கொள்ளவும் விரிவான பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் சுயாதீன சிறப்பு ஆலோசகருடன் ஒரு அர்ப்பணிப்புள்ள நீதித்துறை பொறிமுறையை உருவாக்கவும் வோல்கர் டேர்க் அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட காணிகளை விடுவித்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) இரத்துச் செய்தல் மற்றும் நீண்டகாலமாக அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவித்தல் ஆகியவற்றையும் அறிக்கை பரிந்துரைக்கிறது.

சுயாதீனமான அரச வழக்குதொடுநர் அலுவலகத்தை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை வரவேற்கும் அதே வேளையில் சிவில் சமூகத்தின் மீதான தொடர்ச்சியான துன்புறுத்தல், தன்னிச்சையான கைதுகள், சித்திரவதை மற்றும் காவலில் வைக்கப்பட்ட மரணங்கள் குறித்து டேர்க்கின் அறிக்கை எச்சரிக்கிறது.

அத்துடன் இணையவழி பாதுகாப்புச் சட்டம், சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கைச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட நிறுவன மற்றும் தரவுப் பாதுகாப்பு சட்டமூலம் போன்ற கட்டுப்பாட்டுச் சட்டங்களை இரத்துச் செய்ய அல்லது திருத்தவும் இது வலியுறுத்துகிறது.

அதேநேரம், காணாமல் போனவர்களின் குடும்பங்களைக் கண்காணிப்பது மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து தன்னிச்சையான கைதுகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கவலை வெளியிட்டுள்ளது.

சித்திரவதை மற்றும் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் மரணங்கள் தொடர்பான வழக்குகளையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக நிறுத்தி வைக்குமாறும் வலியுறுத்தியுள்ளது.

பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் குறிப்பாக மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மீது பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை எடுத்துக்காட்டியுள்ள வோல்கர் டேர்க், தீங்கு விளைவிக்கும் சிக்கன நடவடிக்கைகள் இல்லாமல் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்துக்கு நிதி இடத்தை வழங்குமாறு சர்வதேச கடன் வழங்குநர்களை உயர்ஸ்தானிகர் கோரியுள்ளார்.


இந்தநிலையில் தேசிய ஒற்றுமை மற்றும் கடந்த கால துஷ்பிரயோகங்கள் மீண்டும் நிகழாமை என்பன உண்மையான பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளுக்கான மரியாதை ஆகியவற்றில் சார்ந்துள்ளது எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## வேலையாட்கள் தேவை

புதுக்குடியிருப்பு மற்றும் வவுனியாவில்
இயங்கிவரும் புடைவையகம் ஒன்றிற்கு
salesல் அனுபவமுள்ள ஆண், பெண்
இருபாலாரும் தேவை. (1432)
076 889 1308, 077 839 3974

# மரண அறிவித்தல்

மலர்வு
02 - 03 - 1982



உதிர்வு
12 - 08 - 2025

## கந்தையாபிள்ளை கந்தராசா

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் உமையாள்புரத்தை வசிப்பிடமாகவும் தற்போது 19/2 முரசுமோட்டையில் வசித்து வருபவருமான ராசன் என்று செல்லமாக அழைக்கப்படும் கந்தையாபிள்ளை கந்தராசா அவர்கள் கடந்த (12.08.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை - நாகபூஷணி தம்பதியரின் அன்பு மகனும் இலங்கைவேந்தன் - வீரலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் மைதிலி அவர்களின் அன்புக் கணவரும் மிருணாளினி, விசாகனன், கஜனிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணராசா, ஸ்ரீஸ்கந்தராசா, செல்வநாயகி, கலாநாயகி, வரதராசா மற்றும் காலஞ்சென்றவர்களான இராசநாயகி, ஜீவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயூரன் - நிசாந்தினி, செந்தூரன் - துஷா, வினோகா - டினேஸ்குமார், கஜந்தன் - சந்திரகலா, கலாநாயகி, இராசலெட்சுமி, முனீஸ்வரன், கிருஸ்ணபாலன், மைதிலி ஆகியோரின் மைத்துனனும் விசிந்தன், சுரேகா, சிறிசங்கர், ஜெயசங்கர், சாந்ததாரணி, கௌரிசங்கர், சென்கீரன், சங்கவி, சென்தமிரன் ஆகியோரின் சித்தப்பாவும் நாகவர்சன், நாகவருண் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் மாதீசன், கார்த்திகா, வேணுகா, மலரவன், மாலவன், பிரதாஸ், பிரதீபன், அனித்திரன், அதிர்த், ஆதுர்த், அருஷ், ஆருத் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடலானது தகனக்கிரியைக்காக ஐயன்கோவிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(1437)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-3645)

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்
09 . 06 . 1977



இறைவன் அடியில்
12 . 08 . 2025

எமது நண்பர் திரு.குமாரசாமி விஜயகுமார் அவர்களின் பாசமிகு துணைவி

## அமரர் திருமதி மாலினி விஜயகுமார்

(ஆசிரியர் - யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)

வந்தபணி முடிவுற முன் நான் வருகின்றேன் என
சிந்தை மயங்கி மனம் நொந்தவர்க்கு விடை கொடுத்து
பந்தம் அறுத்து பாசம் விடுத்து அந்த உலகம் சேர்ந்தீர்
ஆண்டவன் பாதம் சேர்ந்து பணிசெய்திடுவீர்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும் - நல்லூர் நண்பர்கள்

(5035)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org